ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

28.08.2025

1. ஞான குருவான சண்முகநாதா
ஞானிகளை உருவாக்கும் வேலவா
ஞானபண்டிதா உன் கருணைபட
ஞான தேசிகன் யானும் கலியினில்

2. கலியினில் அவதாரம் படைத்து
கந்தமகா சோதி கலந்து
அழியாமை எனும் ஞானவாழ்வை
அருளுவேன் உலக மக்களுக்கு

3. மக்களுக்கு விசுவாவசு ஆண்டு யாளி திங்கள்
மார்க்கமுடன் ஈராம் குருவார அருளாசி
ஆக்கமுடன் அரங்கனும் உரைப்பேன்
ஆறுமுகனார் சோதி வழிபாட்டை

4. வழிபாட்டை பிரணவக் குடிலுக்கு
வந்தணுகி மக்களெல்லாம் செய்து
தெளிவு தரும் சைவநெறி ஏற்று
தேசிகன் யான் தரும் தீட்சை தன்னை

5. தன்னையே ராம்குமார் எனும்
தக்க சீடன் கரம்பட அடைந்து
மண்ணுலகோர் ஞானம் பயில
மகா ஞானிகள் பூசை கலந்து

6. கலந்துமே வழிபாடு செய்து
கந்தனே தருகின்ற அருளமுதை
பலம்தர பிறவிப் பிணி தீர வேண்டி
பணிவோடு ஏற்று உண்டு வர

7. வருகவே ஞானபலம் கூடும்
வருகைதந்து அரங்கன் என்
தருமத்தில் பொருளுதவி செய்து
தரும சேவை பலம்தனை கூட்ட

8. கூட்டவே சர்வ பலம் கிட்டி
குறைவிலா அருள் பொருள் வளம்
எட்டியே இவை பிறவி தன்னில்
இல்லையென யாவர்க்கும் கொடுக்கும்

9. கொடுக்கும் சக்தி பெருகியே
குருவரங்கன் என்னோடு குருபரன்
தடையற உங்களுக்கு அருளிட
தவதரும பலமாக பாக்கியம் அடைவர்

10. அடையவே அரங்கன் என் வழி
ஆறுமுகனார் தந்த உயர் வழி
தடையின்றி மக்கள் எல்லாம் வர
தரணிக்கே மாற்றம் நிகழ்வது உறுதி

11. உறுதி தந்து அரங்கன் யானும்
உங்களை சோதி வடிவில் காக்க
ஆறுமுக சோதி ஏற்றி அழைக்க
அஞ்சேல் என வருவேன் அருள்வேன்
அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி